திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, இந்த அரவக்குறிச்சி ஒன்றியம் பள்ளபட்டிலே பேரூராட்சி மன்றப் பகுதியிலே கோடை காலத்திலேயும் காற்று காலத்திலேயும் பால் என்ற பெயரால் தண்ணீர்தான் கிடைக்கிறது. அங்கே பத்தாயி ரத்திற்கும் அதிகமான மக்கள் வாழ்கிறார்கள். அங்கே நல்ல பால் கிடைக்கக்கூடிய முறையில் ஏதாவது ஒரு திட்டத்தை ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பால்பண்ணை அங்கே ஏற்படுத்துவது இயலாது என்று ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டது. பள்ளப்பட்டி பகுதியிலே பால் தேவை நாளொன்றுக்கு 1,000 லிட்டர்கள் ஆகும். அங்கே ஏற்கனவே அரவைக்குறிச்சி கூட்டுறவு பால் வள சங்கம் ஒன்று இயங்கி வந்தது. அது தற்போது செயல் படவில்லை. அதற்கு உயிரூட்டுவதற்காக முயற்சியெடுத்துக் கொள்ள தற்போது உத்தரவிடப்பட்டுள்ளது, அப்படியில்லை யென்றால் அங்கேயிருப்பவர்கள் புதிய சங்கம் ஏற்படுத்த முன்வந் தால் அதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதன் மூலம் அந்தப் பகுதியில் உள்ள பால் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும்.

கதர்-கிராமப் பொருட்காட்சிகள்.

* 418 வினா.—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு அற நிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) கதர்-கிராமத் தொழில்களை ஊக்குவிக்கும் பொருட்டு எல்லா நகரங்களிலும் கண்காட்சி நடத்த அரசு உத்தேசித் துள்ளதா ?

(இ) சென்னை அரசினர் தோட்டத்தில் நடைபெற்ற கதர்-கிராமத் தொழில் கண்காட்சியில் விற்பனையான பொருட்களின் மதிப்பு எவ்வளவு ? அதன் மூலம் கிடைத்த வருவாய் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) ரூ. 1,60,999.98 மதிப்புள்ள கதர்-கிராமத்தொழில் உற்பத்திப் பொருட்கள் விற்கப்பட்டதில் ரூ. 24,427.56 ஆதாயம் கிடைத்தது. இத்துடன் விற்பனை நிலையங்களில் பலநாட்களாகத் தேங்கிக் கிடந்த அழுக்கடைந்த கதர் துணிகள் குறைந்த விலையில் ரூ. 62,238.92-க்கு விற்கப்பட்டன.

1973 நவம்பர் 26]

திரு. நா. வெ. குருசாமி: தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு சென்னையிலே நடைபெற்ற இந்த கதர் கண்காட்சியைப் போல் ஜில்லா தலைநகரங்களிலேயும் ஆரம்பிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு நடத்தப்பட்ட கண்காட்சிக்கு அகில இந்திய கதர்-கிராமத் தொழில் கழகத்தினர் நிதி உதவி தந்தார்கள். அது மாதிரி மாவட்டந்தோறும் கண்காட்சிகளை நடத்தவேண்டுமென்ற முறையிலே ஏற்கெனவே இதற்குப் பொறுப்பேற்றிருந்த அமைச்சர் அவர்கள் அவைகளுக்கும் உதவி செய்யவேண்டும் என்ற கருத்தை அகில இந்திய கதர்-கிராமத் தொழில் ஆணைக் குழுவிடம் தெரிவிக்கப்பட்டு நிதியுதவி கேட்கப்பட்டிருக்கிறது. அந்த நிதி கிடைத்தால் மாவட்டந்தோறும் அப்படிப்பட்ட கண்காட்சியை நடத்தலாம்.

திரு. எம். சுரேந்திரன்: இந்தக் கண்காட்சியிலே பழைய துணிகளையெல்லாம் விற்றதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குறிப்பிட்ட காலத்திலே மட்டும் இப்படிச் செய்வதற்குப் பதிலாக பழைய துணிகளை எல்லாம் எவ்வளவு விலைக்குக் குறைத்து விற்கவேண்டுமென்று சொல்லி ஒரு விலையை வைத்து அந்தந்தப் பகுதிகளிலே உள்ள விற்பனை நிலையங்களிலே எல்லாம் எப்பொழுதும் விற்கக்கூடிய முறையிலே செய்தால் அவைகளை இன்னும் அதிகமாக விற்பனை செய்யலாமே, அவ்வாறு செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட துணிகளைப் பொறுத்தவரையில் எவ்வளவு நாட்களுக்கு தேங்கிக் கிடக்கின்றன என்பதைப் பார்த்து, அப்படி விற்காவிட்டால் நஷ்டமாகிவிடும் என்ற அடிப்படையில்தான் இப்படி நாம் ஏற்பாடு செய்கிறோம். அப்படிச் செய்ததின் காரணமாகத்தான் 60 ஆயிரம் ரூபாய்க்கும் மேலாக அது விற்பனையாகியிருக்கிறது. இல்லாவிட்டால் அதுவும் விற்காமல் கெட்டு விடுவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[1973 நவம்பர் 26

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அவையுரிமைப் பிரச்சினை.

உறுப்பினர் திரு. எம். ஏ. லத்தீப் அவர்கள் பேரவையைக் குறித்து கூறிய சொற்றொடர் குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு

[முற்பகல் 10-00]

MR. SPEAKER: Hon. members will remember that yesterday the hon. Member Thiru K. T. K. Thangamani raised a matter of privilege against the hon. Member Thiru M. A. Latheef for having used the expression "this House is going to dogs". Thiru M. A. Latheef while explaining his position had stated that the said expression containing the English idiom "going to dogs" meant that the "House was going to disorder.". He had, however, added that he had never meant any disrespect to the House or to any Member of the House. No doubt the phrase "going to dogs" is an English idiom meaning "going to ruin" or "going to disorder". I am satisfied that the hon. Member Thiru Latheef had never intended any disrespect to the House or to any Member of the House. Anyway, the use of the idiom in the House is not a happy thing and it cannot be said to be quite appropriate. However, in view of the explanation offered by the hon. Member Thiru Latheef, I think no further action is called for.

I wish to take this opportunity to draw the attention of the Press in connection with their reporting of the proceedings of the House. Normally, the hon. Members speak when they are called upon to do so by the Hon. Speaker. But, sometimes, it so happens that Members attempt to speak without the Speaker's permission and there are also cross talks among the members. These talks do not strictly form part of the proceedings of the House. When such cross talks are reported with undue prominence in the newspapers a wrong impression is likely to be created in the minds of the public about the proceedings of the Legislature, and this is not very conducive to the nurturing of our growing democracy in which the Press have got a major role to play. So, I earnestly appeal to them to use their discretion remembering their own responsibility in this matter.